# Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி

பகுதி - 1

மதிப்பெண்கள் : 90

14 x 1 = 14

அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

1. பாயிரம் இல்லது ________ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. பிரிந்தோர் - இலக்கணக்குறிப்புதருக
   அ) உரிச்சொற்றொடர் ஆ) வினைத்தொகை
   இ) தொழிற்பெயர் ஈ) வினையாலணையும்பெயர்
3. ஏமம் - என்பதன் பொருள்
   அ) கெடுக ஆ) பாதுகாப்பு
   இ) விரைந்து ஈ) கவிதை
4. பொருத்துக.
   அ) விரியன் - 1. தண்டை
   ஆ) திருகுமுருகு - 2. காலாழி
   இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு
   ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்
   அ) 3,4,2,1 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 4,1,3,2
5. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர் ________.
   அ) சென்னை ஆ) ஆலப்புழை
   இ) தென்காசி ஈ) திருநெல்வேலி
6. சீறாப்புராணத்தின் ஆசிரியர்
   அ) கம்பர் ஆ) சீதக்காதி
   இ) உமறுப்புலவர் ஈ) படிக்காசுப் புலவர்
7. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை
   அ) துள்ளல் ஓசை ஆ) அகவல் ஓசை
   இ) செப்பல் ஓசை ஈ) தூங்கல் ஓசை
8. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
   அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்
9. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்
   அ) பொன்னியின் செல்வன் ஆ) சிவகாமிசரிதம்
   இ) மனோன்மணியம் ஈ) இரகசியவழி
10. திருவாச்கத்தையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
    அ) வீரமாமுனிவர் ஆ) ஜி.யூபோப்
    இ) கால்டுவெல் ஈ) சீகன்பால்
11. Smartphone - என்பதன்தமிழ்ச்சொல்
    அ) திறன்பேசி ஆ) அலைபேசி இ) தொலைபேசி ஈ) மடிக்கணினி

Padasalai.Net

12. சிம்பொனி தமிழர் என அழைக்கப்படுபவர்

அ) இளையராஜா ஆ) ஏ.ஆர்.ரகுமான்

இ) சங்கர்கணேசன் ஈ) அனிருத்

13. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில்

இ) சிறுதேர் ஈ) சிறுபறை

14. "நிழல்போலத் தொடர்ந்தான்" - இது எவ்வகை உவமம்?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

பகுதி - 2

பிரிவு- 1

எவையேனும் மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக. 3x2=6

15. காவடிச் சிந்து என்பது யாது?

16. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

17. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

18. கற்றேன் என்பாய் கற்றாயா? என்று அப்துல் ரகுமான் யாரிடம் கேட்கிறார்?

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக. 2x2=4

19. தொழு உரம் என்பது என்ன?

20. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21. நாழிகைக்குள் திணிக்கும் மருந்து போல் என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.

பிரிவு-3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர் உருவாக்குக.*

நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

23. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.*

அ) தங்கை ஆ) பிண்ணாக்கு

24. *பிறமொழி சொற்களை தமிழாக்கம் செய்க.*

அ) வருடம் ஆ) விசா

25. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*

பொரி, பொறி

26. *ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) உண்டான் ஆ) அணிந்தேன்

27. *ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.*

அ) தண்டுடை ஆ) புவியாட்சி

28. *ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக.*

அ) மாண்ட தவளை ஆ) வாழிய

29. *கலைச்சொல் தருக.*

அ) Passport ஆ) Document

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



30. *வல்லின மெய்கள் இட்டும் நீக்கியும் எழுதுக.*

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

பகுதி-3

பிரிவு- 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக. 2x4=8

31. க.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32. "உயர்தமிழை உயிரென்று போற்றுங்கள்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருவள்ளுவர் கூறுவன யாவை?

34. சேரநாடு செல்வ வளமிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக. 2x4=8

35. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

37. குருக்குலக் கல்வி குறித்துப் பெறப்படும் செய்தி யாது?

38. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக. 3x4=12

39. உருவக அணி

*(அல்லது)*

வேற்றுமை அணியை விளக்குக.

40. *இலக்கியநயம்பாராட்டுக: (மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக)*

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
  பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
  மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக்- குத்திக்
  காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
  பேதமையற்றிடும் காணீர் ! *- பாரதியார்*

41. *தமிழாக்கம் தருக.*

அ) Education is the most powerful weapon, which you can use to change the world.

ஆ) Culture does not make people. People make culture.

இ) Looking at beauty in the world is the first step of purifying the mind.

ஈ) You must be the change you wish to see in the world.

42. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.*


அ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

*(அல்லது)*

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




பகுதி - 4

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 x 6 = 18**

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி நின்று விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் என்பதை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை ?

பகுதி- 5

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47. அ) "சிற்றூரும் " எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.

ஆ) "யான்" என முடியும் திருக்குறள்.

******